## பிரதமர் மோடி 40 நாட்கள் இங்கேயே தங்கினாலும்

# தமிழ்நாட்டில் ஒரு தொகுதியில் கூட பா.ஜ.க. வெற்றி பெற முடியாது!

## திருவள்ளூர் மாவட்டம் - பாடியநல்லூர் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**திருவள்ளூர், மார்ச் 4-**

**“பிரதமர் மோடி 40 நாட்கள் கூட இங்கேயே தங்கினாலும் தமிழ்நாட்டில் ஒரு தொகுதியில் கூட பா.ஜ.க. வெற்றி பெற முடியாது” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறினார்.**

**திருவள்ளூர் மாவட்டம், பாடியநல்லூரில், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 720 கிராமப் பஞ்சாயத்துக்களில் 5,260 இளைஞர்களுக்கு ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ (ஸ்போர்ட்ஸ் கிட்) வழங்கும் விழா, சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி, எழுச்சி உரை ஆற்றினார்.**



அப்போது அவர் பேசியதாவது :-

முதலமைச்சர், கழகத் தலைவரின் பிறந்த நாளை அனைவரும் கொண்டாடும் வகையில், சென்னை கிழக்கு மாவட்டம் சார்பாக, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்துள்ளீர்கள்.

அண்ணன் சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் கழகத்தைச் சேர்ந்த 72 மகளிருக்கு ஸ்கூட்டர், 500 மாணவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை மற்றும் 525 கழக மூத்த முன்னோடிகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குகிற இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

சென்னை கிழக்கு மாவட்டம் சார்பாக, அண்ணன் சேகர்பாபு அவர்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகிறார். கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு தொடர்ச்சியாக நூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தினார். இப்போது நம் தலைவருடைய பிறந்த நாளை முன்னிட்டு, ஒரு மாத காலத்திற்குத் தொடர்ந்து 71 நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு வருகிறார்.

### தலைவர் மீதும் என் மீதும் பேரன்பைக் கொண்டவர்!

இரண்டு நாட்களுக்கு முன்பு துறைமுகம் பகுதியில் ஒரு மிகப்பெரிய நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தினார். கழகத்திற்காக உழைத்த 25 ஆயிரம் நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதை என்னை வைத்துத்தான் தொடங்கி வைத்தார். தடுக்கி விழுவது என்று சொல்வார்களே. அதுபோல சென்னை கிழக்கு மாவட்டம் என் தொகுதியில் இருந்து தடுக்கி விழும் தொலைவில் தான் இருக்கிறது. இப்போதெல்லாம் கனவில்கூட அண்ணன் சேகர்பாபு அவர்கள் தான் வருகிறார். தலைவர் மீதும் என் மீதும் பேரன்பைக் கொண்டவர் அண்ணன் சேகர்பாபு.

இன்னும் நான்கு, ஐந்து நாட்களில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறேன். எனவே, உங்களுடைய வாழ்த்துகளைப் பெற இங்கு வந்திருக்கிறேன். மொத்தம் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. சென்னை மத்திய மாவட்டத்திற்குப் பிரச்சாரம் ஏற்கெனவே முடிந்துவிட்டது. வேட்பாளர் யார் என்று உங்களுக்கே தெரியும். கடந்த முறையை விட, இம்முறை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் இம்முறை அவரை நீங்கள் வெற்றி பெற வைப்பீர்கள் என்று நம்புகிறேன். அண்ணன் சேகர்பாபு அவர்கள் அதைச் செய்து காட்டுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

### கழகக் குடும்பம் ஒன்றாகச் சேர்ந்து, தலைவர் வாழ்க, என்று வாழ்த்துகிறீர்கள்!

எத்தனையோ முறை உங்களைச் சந்தித்து இருக்கிறேன். ஆனால், தலைவர் நம் முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாளில் உங்களை எல்லாம் சந்தித்து உங்களுடன் இருக்கும் வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிறந்த நாளைக் குடும்பத்தோடு கொண்டாடுவார்கள், நண்பர்களோடு கொண்டாடுவார்கள், உறவினர்களோடு கொண்டாடுவார்கள். அதைத்தான் இன்று சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்.

கழகக் குடும்பம் ஒன்றாகச் சேர்ந்து இன்று ‘தலைவர், வாழ்க வாழ்க’ என்று நீங்கள் எல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள். நான் அடிக்கடி சொல்வதுபோல, என் மனதுக்கு நெருக்கமான நிகழ்ச்சி என்றால், அது கழகத்திற்காக ரத்தம் சிந்திய மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சிதான். என்னைப் பல்வேறு மாவட்டங்களுக்கு நிகழ்ச்சிகளுக்கு அழைக்கும்போதும், பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும் நடத்த வேண்டுமென்று நான் சொல்வேன். அப்படி, கடந்த ஒன்றரை வருடத்தில் மட்டும் கழகத்தின் 43 மாவட்டங்களில் கலந்துகொண்டு கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக, பொற்கிழியாகக் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு வழங்கி இருக்கிறோம்.

### தலைவராகத் தொண்டனை வாழ்த்துகிறேன்!

அண்ணன் சேகர்பாபு அவர்கள் நான்கு மாதங்களுக்கு முன்பு, தலைவரை அழைத்து, கொளத்தூர் தொகுதியில் 500 பேருக்குபொற்கிழிவழங்கும்நிகழ்ச்சியை நடத்தினார். “நான் இங்கே கொளத்தூரில் பொற்கிழி கொடுத்துக் கொண்டிருக்கிறேன். கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் தம்பி உதயநிதி தமிழ்நாடு முழுவதும் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், இப்படி ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார். அதை நான் பாராட்டுகிறேன். தந்தையாக என் மகனை வாழ்த்தவில்லை, தலைவராகத் தொண்டனை வாழ்த்துகிறேன்” என்று தலைவர் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டார். அந்த வாழ்த்தும் பெருமையும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொற்கிழியைப் பெற வந்த கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளான உங்களைத்தான் சேரும்.

இன்று, கழகத்திற்காக உழைத்த கழக மகளிர் 72 பேருக்கு ஸ்கூட்டர், 500 மாணவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை, 525 கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழியாக 10 ஆயிரம் என 3 விதமான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இந்த மூன்று நிகழ்ச்சிகளையும் ஒரே நிகழ்ச்சியாக நடத்த வேண்டும் என்றால், அண்ணன் சேகர்பாபு அவர்களால் மட்டுமே முடியும். நம் தலைவர் மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி கொடுத்தார், அண்ணன் சேகர்பாபு ஸ்கூட்டர் கொடுத்துவிட்டார்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும், வேலைக்குப் போக வேண்டும், படிக்க வேண்டும் என்றுதான் நம் தலைவர் அவர்கள் மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதியைக் கொடுத்தார். இந்தத் திட்டங்களை எல்லாம் தொடர்ந்து மக்களிடம் கொண்டு போய்ச் சேருங்கள். மாணவர்கள் படிக்க வர வேண்டும், குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும் என்றுதான் நம் தலைவர் காலை உணவுத் திட்டம் கொடுத்தார்.

### மகளிரிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்!

ஒரு திட்டத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று மகளிரிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டத்தில் இந்த இரண்டரை வருடத்தில் மட்டும் மகளிர் மொத்தம் 454 கோடி முறை பயணம் செய்திருக்கிறார்கள். அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கச் செல்லும் பெண்களுக்கு முதலமைச்சரின் புதுமைப்பெண் திட்டம். இதேபோல ஆண்கள் கல்லூரி படிக்க, `தமிழ்ப்புதல்வன் திட்டத்தை’ இப்போது அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் உள்ளது. ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைத் தலைவர் கொடுத்து இருக்கிறார். இதையெல்லாம், ஏன் இங்கே சொல்கிறேன் என்றால், இன்று நம் தலைவரின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம்.

நாம் வந்தோம், கூடினோம், கொண்டாடினோம் என்று இல்லாமல் வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 வெற்றி பெற்று தலைவரின் கைகளில் கொடுக்க வேண்டும். அதுதான் தலைவருக்கு நாம் கொடுக்கப்போகிற மிகப்பெரிய பிறந்தநாள் பரிசாக இருக்கும். நீங்கள் யாரை நினைக்கிறீர்களோ, மாணவச் சமுதாயமான நீங்கள் யாரை நினைக்கிறீர்களோ, கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் நீங்கள் யாரை நினைக்கிறீர்களோ, வந்திருக்கக்கூடிய நீங்கள் அத்தனை பேரும் மனதில் யாரை நினைக்கிறீர்களோ, நம் தலைவர் யாரை நினைக்கிறாரோ அவர் தான் அடுத்த ஒன்றிய பிரதமராக அமர வேண்டும். அதுதான் கலைஞர் நூற்றாண்டில், நம் தலைவருக்குக் கொடுக்கும் மிகச்சிறந்த பிறந்தநாள் பரிசாக இருக்க முடியும். அதற்காக நாம் அனைவரும் உழைக்க வேண்டும்.

### தமிழ்நாட்டை மட்டும்தான் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கிறது!

பிரதமர் மோடிக்கு ‘28 பைசா மோடி’ என்று 2 நாட்களுக்கு முன்பு நான் பெயர் வைத்தேன். அது ஏன் என்று உங்களுக்கே தெரியும். தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசுக்கு ஒரு ரூபாய் வரி கட்டினோம் என்றால், திருப்பித் தருவது வெறும் 28 பைசாதான். இந்த ஐந்து வருடத்தில் தமிழ்நாடு ஒன்றிய அரசுக்குக் கொடுத்திருக்கக் கூடிய வரி 6 லட்சம் கோடி ரூபாய். ஆனால், ஒன்றிய அரசு நமக்குத் திருப்பித் தந்தது வெறும் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய். ஆனால் பா.ஜ.க ஆளுகிற மாநிலங்களில் இருந்து ஒரு ரூபாய் வரி கொடுத்தால் அவர்களுக்கு மூன்று ரூபாய் வரை திருப்பித் தருகிறார்கள். தமிழ்நாட்டை மட்டும்தான் ஒன்றிய அரசு இப்படித் தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. மழை, புயல் அடித்தால்கூட இந்தப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டார் பிரதமர் மோடி. தேர்தலுக்குத் தேர்தல் மட்டும்தான் இந்தப் பக்கம் வருவார். 2019இல் வந்து மதுரையில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்டப் போகிறேன் என்று அடிக்கல் நாட்டி விட்டுப் போனார். ஒரே ஒரு செங்கல்தான் இருந்தது. அந்தச் செங்கலையும் நான் தூக்கிக்கொண்டு வந்து விட்டேன்.

### வாயைத் திறந்தால் சுடுவதெல்லாம் வெறும் வடை!

இப்போது திரும்பவும் மதுரைக்குச் சென்று எய்ம்ஸ் கல்லூரி வந்துவிட்டது என்கிறார். இதுவரை அந்த எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிக்கு அவர் ஒரு பைசா கூட ஒதுக்கவில்லை. ஆனால், மற்ற மாநிலங்களில் சென்ற மாதம் ஆறு எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிகளைத் திறந்து இருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாக வஞ்சித்துக் கொண்டிருக்கிறார். பிரதமர் மோடி வாயைத் திறந்தால் சுடுவதெல்லாம் வெறும் வடை. தி.மு.கவை அழிக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். மோடி அவர்களே உங்கள் தாத்தா வந்தாலும் அது முடியாது. தி.மு.கவை அழிப்பது என்ன! உங்களால் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது. 60, 70 வருடமாக இதைச் சொன்னவர்கள்தான் அழிந்து போய் இருக்கிறார்களே தவிர, தி.மு.கவை எவராலும் அழிக்க முடியவில்லை.

தமிழ்நாட்டுக்கு வந்து இரண்டு, மூன்று நாட்கள் பிரச்சாரம் செய்தாலே வெற்றி பெற்று விடலாம் என்று பிரதமர் மோடி நினைக்கிறார் போல. நான் ஒரு சவால் விடுகிறேன், அடுத்த 40 நாட்கள் கூட இங்கேயே தங்குங்கள், ஆனால், உங்களால் ஒரு தொகுதியில் கூட தமிழ்நாட்டில் வெற்றிபெற முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டு மக்கள் மிகவும் தெளிவானவர்கள். நீங்கள் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோவில் கட்டுங்கள். எங்கள் தமிழ்நாட்டு மக்கள் வந்து நன்றாக சாமி கும்பிடுவார்கள். ஆனால், தேர்தல் என்று வந்தால் வாக்குச்சாவடிக்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில்தான் வாக்களிப்பார்கள். எனவே, இந்த நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்களுக்கு நம் பிறந்தநாள் வாழ்த்துகளை உங்கள் மூலம் நான் தெரிவித்துக் கொண்டு, அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு மீண்டும், மீண்டும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து வந்திக்கும் உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் என் அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, ராணிப்பேட்டை காந்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதிமாறன், சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சேமிப்பு கிடங்கு வாரிய தலைவர் ப.ரங்கநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிச்சந்திரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, ராஜசேகர், வாசு, கோபி ஜெயின், தமிழ் வேந்தன், சாமிக்கண்ணு, சோ.வேலு, சுதாகர், டி.எஸ்.பி.ராஜகோபால், அம்பத்தூர் நாகராஜன், ஐ.சி.எப். முரளிதரன், நாகராஜன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், ஆசாத், தேவா, புனிதவதி எத்திராசன், தேவ ஜவகர், அணிகளின் மாநில நிர்வாகிகள் பருதி இளம்சுருதி, உமாகாந்தி, ஷேக் அப்துல்லா, கௌதம், சந்துரு, மண்டலக் குழுத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி, ஸ்ரீ ராமலு, சரிதா மகேஷ் குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் ஜி.ஜே.பிரபு, சங்கர் நானா, இளைஞர் அணியின் மாவட்ட முன்னாள் அமைப்பாளர் மகேஷ் குமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் வார்டு 11, நேரு நகர் பகுதியில் பேரூர் இளைஞரணி அமைப்பாளர். டபிள்யு. இ. எஸ். சுகுமாரன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. நல திட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், திருமதி டபிள்யு இ.எஸ்.இல்லா மல்லி ஸ்ரீதர்டி சஞ்சய் காந்தி, கே.தியாகராஜன், பி.சுந்தரராமன், என்.சச்சிதாஸ், கே.பழனி, டி.பரமானந்தம், எஸ்.பாபு, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆர்.வெங்கடேசன், ஏ.கே.ஜி.தனசேகரன், முகமது இஸ்மாயில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,சென்னை தெற்கு மாவட்டம்,173 அ வட்டத்தில் பகுதி துணைச் செயலாளர் அடையாறு ஆ.ச. ஸ்ரீகாந்த் தலைமையில் பகுதி செயலாளர் துரை கபிலன்,தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி,வட்டச் செயலாளர் ம.தமிழரசு, அ.ச.கவாஸ்கர்,இரா. சுரேஷ்,வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி முன்னிலையில் கழக தலைமை இலக்கிய அணி தலைவர்,புலவர் இந்திரகுமாரி அவர்கள் ஆயிரம் பேருக்கு அசைவ விருந்து வழங்கினார்.இதில் மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.